TIRUMURAI THE SIXTH

(St. Appar's Thaandaka Hymns)


Tamil Text

with

English Translation

By Sekkizhaar Adi-p-Podi T.N.Ramachandran

INTERNATIONAL INSTITUTE OF
SAIVA SIDDHANTA RESEARCH
OF
DHARMAPURAM AADHEENAM
DHARMAPURAM
1995



Rahasyam - Nataraajar - Sivakaami
at
Chidambaram - Thillai - Koyil

TIRUMURAI THE SIXTH

(St. Appar's Thaandaka Hymns)

Tamil Text

with

English Translation by

Sekkizhaar Adi-p-Podi T.N.Ramachandran

Honorary Director,

International Institute of Saiva Siddhanta Research

of Dharmapuram Aadheenam

DHARMAPURAM AADHEENAM

Dharmapuram, Mayiladuthurai 609 001.

TamilNadu, South India

First Published: 1995

Price: Rs. 200/-

Released during the
Eighth International Conference-Seminar
of Tamil Studies, Thanjavur —
1-1-1995 to 5-1-1995

Printed by Maravanpulavu K. Sachithananthan at
Kaanthalakam, 834, Anna Saalai, Madras 600 002.
Phone: 834505 Fax. 834728



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

The Founder of Dharmapura Aadheenam
His Exalted Holiness St. Gurugnaanasambandha
Paramaachaarya Swaamikal

CONTENTS



St.Appar (dated bronze: A. D. 1006 from Tiruppukalur)
Courtesy: French Institute of Indology, Pondichery



His Holiness Shanmuka Desika Gnaanasambandha
Paramaachaarya Swaamikal
The 26th Pontiff of Dharmapura Aadheenam

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

முகவுரை

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

ஸ்ரீகுருஞானசம்பந்தர்

திருமுறைகள்:

சைவசமய நூல்களைச் சான்றோர் தோத்திரம், சாத்திரம் என இருவகையாகப் பகுத்துக் கூறுவர். அவற்றுள் தோத்திரம் அன்பின் அடிப்படையில் எழுந்தது. சாத்திரம் அறிவின் அடிப் படையில் தோன்றியது. இவ்விரு திறத்து நூல்களும் மெய்யுணர்வாளர்களால் அருளிச் செய்யப் பெற்றவை.

தோத்திரங்களில் தலையானவைகளாக விளங்குவன பன்னிரு திருமுறைகளாகும். முறை-நூல். திருமுறை என்ற சொல்லுக்கு, தெய்வத் தன்மை வாய்ந்த நூல் என்பது பொரு ளாகும். தெய்வத் தொடர்புடைய கோயில், குளம், நந்தவனம் முதலானவற்றைத் திருக்கோயில், திருக்குளம், திருநந்தவனம் என வழங்குதல் போலத் தெய்வத் தொடர்புடைய இந்நூல் களையும் திருமுறை என வழங்கினர் நம் முன்னோர்.

தேவாரம்:

திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இவற்றை அருளியவர்கள் திருஞானசம்பந்தர் முதலாகச்

சேக்கிழார் ஈறாக 27 அருளாசிரியர்கள் ஆவர். இருபத்தேழு நட்சத்திரங்களும் புற இருளைப் போக்குவது போல இவ்விரு பத்தேழு ஆசிரியர்களும் அருளிய நூல்கள் மக்கள் உள்ளத்தின் கண் உள்ள அக இருளைப் போக்கும் தன்மையன. இவற்றுள் முதல் ஏழு திருமுறைகளை அருளிச் செய்தவர்கள் திருஞானசம் பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் ஆவர். இவை பழந்தமிழ் இசையமைப்பில் பண்ணமைப்புடன் கூடிய இசைப் பாடல்களாதலின் தேவாரம் எனப் போற்றப் பெறும். தே-தெய்வம். வாரம்-இசைப்பாடல். தெய்வத்தைக் குறித்த இசைப்பாடல் என்ற பொருளில் இவை அப்பெயரால் வழங் கப் பெறுகின்றன. தேவாரத்தை 'மூவர் தமிழ்' என ஔவை யார் போற்றியுரைப்பார். 'மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் தமிழ்' என அறிஞர்கள் போற்றி உரைப்பர். இம்மூன்று அருளாசிரியர்களையும் மூவர் முதலிகள் எனவும், இவர் களோடு திருவாசகம், திருக்கோவையார் அருளிய மணிவாச கரையும் இணைத்து, சமயாசாரியர் எனவும் கூறுவர். இந்நால் வர் பெருமக்களும் சைவசமயம் வேற்றுச் சமய நெறிகளால் நிலை குலைந்திருந்த காலத்தில் இறைவன் திருவருளால் இந்நிலவுலகில் அவதரித்து, சைவசமயத்தை நிலைநிறுத்திய பெரு மக்களாதலின் சமயாசாரியர்கள் எனப் போற்றப்படு கின்றனர்.

அடங்கல் முறை:

தேவாரத் திருப்பதிகங்களின் தொகுப்பு நூல் அடங்கல் முறை எனப்படும். இவ்வடங்கல் முறை - தலமுறை, பண் முறை, வரலாற்று முறை என மூவகைப்படும். இவற்றுள் பண் அமைப்புடன் தொகுத்துள்ள அடங்கமே முதல் ஏழு திருமுறை கள் ஆகும். ஏழு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப்பட்டவை. 384 திருப் பதிங்களையும், 4181 பாடல்களையும் கொண்டவை. 4, 5, 6 திருமுறைகள் திருநாவுக்கரசு சுவாமிகளால் அருளிச் செய்யப் பெற்றவை. 313 திருப்பதிகங்களையும், 3066 பாடல்களையும் உடையவை. 7ஆம் திருமுறை சுந்தரரால் அருளிச் செய்யப்பட்டது. 100 பதிகங்களையும் 1026 பாடல் களையும் கொண்டது.

பதிகம் என்ற சொல்லுக்குப் பத்துப் பாடல்களைக் கொண்டது என்பது பொருள். இவற்றுட் சில பதிகங்கள் கூடியோ குறைந்தோ வந்துள்ளன.

அப்பர் திருமுறை:

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரும் சைவப் பணியைச் சற்றே கடந்தும் புரிந்ததில் சம காலத்தவர். நாவுக்கரசர் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வாழ்ந்தவர். இவர் காலத்தில் அரசு புரிந்த மன்னர்கள் முதலாம் மகேந்திரவர்ம பல்லவனும் (கி.பி.580-630), நரசிம்மவர்ம பல்லவன் (கி.பி. 630-668) ஆவர். திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் சைவ சமயத்தின் இருகண்கள் எனச்சேக்கிழார் போற்றுகிறார். திருஞானசம்பந்தர் திருமுறைகள் உண்மைப் பொருளைச் சுருங்க உரைக்கும் முறையில் வேதங்களைப் போல் அமைந்தவை. திருநாவுக்கரசர் திருமுறைகள் அதனை விரித்துக் கூறும் முறையில் சிவாகமங்களைப் போல் அமைந்தவை. இவ்விருவர் பாடல்களையும் கேட்டு மகிழும் இயல்பினன் இறைவன் என்பதை சுந்தரர் 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக் கரையனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானை' எனப் போற்றி உரைக்கிறார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய நான்காம் திருமுறையில் 60 தலங்களைக் குறித்தனவும் 16 பொதுவாக அமைந்தனவுமாகிய 113 பதிகங்கள் உள்ளன. அப்பர் அருளிய திருமுறைகளில் இத்திருமுறை மட்டும் கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தார பஞ்சமம், பழந்தக்க ராகம், பழம் பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி என்ற பத்து பண்ணமைப்பில் பாடப் பெற்றுள்ளது. ஐந்தாந் திருமுறை குறுந்தொகை என்னும் யாப்பமைதியால் பாடப்பெற்றது. 76 தலங்களைக் குறித்தனவும் 12 பொதுவாக் அமைந்தனவுமாகிய 100 பதிகங்கள் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. ஆறாந்திருமுறை தாண்டகம் என்னும் யாப்பில் அமைந்ததாகும். இத்திருமுறையில் 65 தலங்களைக் குறித்தனவும் பொதுவாக 8 அமைந்தனவுமாகிய 99 பதிகங்கள் இடம் பெற்றுள்ளன.

தாண்டகம்:

தாண்டகம் என்னும் யாப்புக் குறித்த இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், யாப்பருங்கலவிருத்தி என்னும் இலக்கண நூல்களிலிருந்து நாம் அறியலாம். ஒவ்வொரு அடியிலும் ஆறு சீரோ எண் சீரோ அமைய ஆடவரையேனும், கடவுளரையேனும் நான்கடியால் போற்றிப் பாடுவது தாண்டகத்தின் இலக்கணம். அவற்றுள் அறுசீரால் அமைவது குறுந்தாண்டகம். எண்

சீரால் அமைவது திருத்தாண்டகம். இதனைப் பன்னிரு பாட்டியல்,

> மூவிரண் டேனும் இருநான் கேனும்
> சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
> கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
> அறுசீர் குறியது, நெடியது எண்சீராம்'

என்று கூறுகிறது.

தாண்டகச் சதுரர்:

தமிழிலக்கிய வரலாற்றில் முதன் முதல் தாண்டக யாப்பில் பாடல்களை அருளிய அப்பர் சுவாமிகளை, தாண்டகச் சதுரர் என்று சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்.

> 'தலைவராம் பிள்ளையாரும் தாண்டகச் சதுரராகும்
> அலர்புகழ் அரசும்கூட அங்கெழுந்தருளக் கண்டு''

என்பது பெரியபுராணப் பாடல் பகுதி. தாண்டக யாப்பிற்குத் தந்தையாக இலங்கும் அப்பர் சுவாமிகளைப் பின்னே வந்த சிவப்பிரகாசரும் நால்வர் நான்மணி மாலையில் தாண்டக வேந்தர் என்று போற்றுகிறார்.

> 'வெள்ளேறு உடையான் தனக்கு அன்புசெய்
> திருத் தாண்டக வேந்த'

என்பது அவர் வாக்கு.

பதிகப் பெயர்கள்:

திருத்தாண்டகத் திருப்பதிகங்களில் சில பெரிய திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம், ஏழைத் திருத்தாண்டகம், அடையாளத் திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம், க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம், பல்வகைத் திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், வினாவிடைத் திருத்தாண்டகம், மறுமாற்றத் திருத்தாண்டகம் என்ற சிறப்புப் பெயர்களால் வழங்கப் பெறுகின்றன. ஒவ்வொரு பகுதியையும் எடுத்துப் பொருளை விளக்கி அடங்கலாகத் தயாரித்துள்ள இப்பதிகத் தலைப்புகள் இப்போதைய ஆராய்ச்சியாளர்கட்கு எல்லாம் முன்னோடியாக 7-ஆம் நூற்றாண்டிலேயே அப்பரடிகளால் அறிவிக்கப் பெற்றுள்ளமை போற்றத்தக்கதாய் உள்ளது.

தில்லைப் பதிகம்:

தில்லையைக் குறித்த 'அரியானை' எனத் தொடங்கும் பதிகம், பெரிய திருத்தாண்டகம் என்றும், 'மங்குல்மதி' எனத் தொடங்கும் பதிகம் புக்க திருத்தாண்டகம் என்றும் கூறப் பெறும். தில்லை ஏனைய தலங்களினும் பெருமை மிக்கது. பஞ்ச பூதத் தலங்களில் ஆகாயத்தலம். ஆகாயம் ஏனைய பூதங் களை உள்ளடக்கிய சிறப்புடையது ஆதலின், அத்தலத்தைக் குறித்த 'அரியானை' என்ற முதல் பதிகம் அப்பெயர் எய்திய தாகலாம். மேலும் அப்பதிக முதல் திருப்பாடலில் தில்லைப் பெருமானை ''பெரியானை'' எனக் குறித்திருப்பதாலும் அப் பெயர் பெற்றது எனலாம். 'மங்குல்மதி' பதிகம் பாடல்கள் தோறும் 'புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே' என்ற முடிபு டையது ஆதலின் புக்கதிருத்தாண்டகம் எனப்பெற்றது. மேலும் எல்லா உலகமும் ஆகாயத்திற்குள் தான் இயங்குகின்றன. எனவே எல்லாத் தலங்களில் உள்ள இறைத் தத்துவமும் இங்கே ஒடுங்குகிறது, இங்கிருந்தே விரிகிறது என்ற கருத்தையும் இது புலப்படுத்தும். சிதம்பரம் அர்த்த சாமச் சிறப்பும் இதனை விளங்கச் செய்யும்.

திருவதிகைப் பதிகம்:

திருவதிகையைக் குறித்த ஐந்து திருப்பதிகங்களில் 'வெறி விரவு' என்னும் பதிகம் இத்தகையோனை 'ஏழையேன் (ஏழை- அறியாமை) பண்டு இகழ்ந்தவாறு என்னே' என இரங்கிப் பாடுவதால் ஏழைத் திருத்தாண்டகம் எனவும், சிவபிரானுக் குரிய அடையாளங்களைச் சுட்டி 'அவனாகில் அதிகை வீரட் டனாமே' எனக் கூறலின் அடையாளத் திருத்தாண்டகம் எனவும், அத்தகைய சிறப்புக்களையுடையவனைப் பல வாறாகப் போற்றி உரைத்தல் நமது கடமை என்பதை 'எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி' என்ற பதிகம், போற்றித்திருத்தாண்டகம் எனவும், போற்றுதலும் வணங்கு தலும் அவன் திருவடிகளையே ஆதலின் அவனது திருவடிப் பெருமைகளை 'அரவணையான் சிந்தித்து அரற்றும்அடி' என்ற பதிகம் திருவடித் திருத்தாண்டகம் எனவும், அத்தகை யோன் பல தலங்களிலும் எழுந்தருளி நம்மைக் காத்து அருள் பாலிப்பவன் அதிகை வீரட்டனாம் என்பதை 'செல்வப்புனல்' என்ற பதிகம் குறிப்பிடுவதால் காப்புத் திருத்தாண்டகம் எனவும் பெயர் பெற்றன. திருவாரூரைக் குறித்த 'கற்றவர்கள்' பதிகமும் கயிலையைக் குறித்த 'வேற்றாகி', 'பொறையுடைய', 'பாட்டான' ஆகிய மூன்று பதிகங்களும் இறைவனைப்

போற்றி உரைப்பன ஆதலின் போற்றித் திருத்தாண்டகங்கள் எனப் பெயர் பெற்றன.

க்ஷேத்திரக் கோவை:

சிவத்தலங்களில் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்றவை பாடல் பெற்ற தலங்கள் எனவும், தேவாரப் பதிகங்கள் பெறாமல் ஒன்றிரண்டு பாடல்களில் அல்லது ஒன்றிரண்டு அடிகளில் வைத்துப் போற்றப் பெற்றவை வைப்புத் தலங்கள் எனவும் வழங்கப் பெறும். அப்பர் சுவாமிகள் தாம் வழிபட்ட பலதலங்களை நினைந்து போற்றிப் பாடியதை க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் எனவும், அவற்றுள் வீரட்டானத் தலங்களையும், பள்ளி, குடி, ஊர், கோயில், காடு, வாயில், ஈச்சரம், ஆறு, மலை, துறை ஆகிய முடிபுடைய தலங்களையும் வகைப் படுத்தி உரைக்கும் பதிகம் அடைவுத் திருத்தாண்டகம் எனவும் வழங்கப் பெற்றன. இங்கும் ஆய்வாளர்கட்குரிய அடைவு முறையைத் அப்பர் தெளிவித்துள்ளமை போற்றி மேற்கொள்ளத்தக்கது.

பலவகைத் திருத்தாண்டகம்:

அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்துத்தங்கியிருக்கும் நாட்களில் பாடலுக்கு ஒன்றாகப் பூந்துருத்தி ஐயாறு நெய்த்தானம் முதலிய அருகிலுள்ள தலங்களைக் குறித்துப் பாடிய பதிகம் பலவகைத் திருத்தாண்டகம் எனப் பெற்றது. இறைவன் இவ்வாறெல்லாம் நின்று அருள் புரிகிறான் என்ற முடிபுடையனவாய் அருளிய 'இரு நிலனாய்' என்ற பதிகம் நின்ற திருத்தாண்டகம் எனவும் பொதுவாக இறைவன் இயல்புகளைச் சுட்டியுரைக்கும் 'அப்பன் நீ', 'ஆமயம்' ஆகிய பதிகங்கள் நின்ற திருத்தாண்டகம் எனவும் வினாவிடை அமைப்பில் பாடிய 'அண்டங் கடந்த' பதிகம் வினாவிடைத் திருத்தாண்டகம் எனவும் பல்லவ மன்னன் தம்மை அழைத்து வரச் செய்தபோது அமைச்சர் முதலியோர் அரசாணையைத் தெரிவித்து நிற்க அவர்கட்குப் பதிலுரையாகக் கூறிய 'நாமார்க்கும்' என்ற பதிகம் 'மறுமாற்றத் திருத்தாண்டகம்' எனவும் வழங்கப் பெற்றன.

நினைவில் நிற்கும் தொடர்கள்:

திருத்தாண்டகத்தை ஓதுவோர் நெஞ்சகங்களில் நிறைந்து நிற்கும் அரிய தொடர்கள் இத்திருமுறையில் பல உள்ளன.

பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவாநாளே' என்று தில்லைத் திருப்பதிகத்தில் பாடல்

தோறும் வரும் தொடர் இறைவன் புகழைப் பேசும் நாட்களே நாம் பிறந்த பயனைப் பெறும் நாட்கள் என்ற கருத்தை உணர்த்தக் காண்கிறோம். 'புள்ளிருக்கு வேளூரானைப் போற் றாதே ஆற்றநாள் போக்கினேனே' என்ற தொடர் சிவபெரு மானை வழிபட வேண்டிய இளமைக் காலமெல்லாம் போற்றாதே அமண் சமயம் புக்குப் போக்கியதை நினைவு கூர்ந்து உரைப்பது. இவ்வாறே 'தலையாலங்காடன் தன்னைச் சாராதே சால நாள் போக்கினேனே' என அத்தலப் பதிகத்தில் ஓதக் காணலாம்.

இறைவன் எழுந்தருளிய தலங்களில் மிகச் சிறப்புடைய்ன இவை என உணர்த்தும் வகையில் 'புலியூர்ச் சிற்றம்பலமே புக் கார் தாமே' எனவும், 'புறம்பயம் நம்மூரென்று போயினாரே' எனவும் 'வலம்புரமே புக்கு அங்கு மன்னினாரே' எனவும் வரும் தொடர்கள் அமைந்துள்ளன.

'திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே' எனவும் திருவீழிமிழலையானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே எனவும் கீழ்வேளூர் ஆளும் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே எனவும் சில தலங்களில் இவை போன்ற உண்மைகளை அப்பர் கூறுதல் காணலாம்.

'காதன்மையால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே கன் றாப்பூர் நடுதறியைக் காணலாமே' எனவும், காளத்தியான் என் கண்ணுளானே எனவும், 'திருப்புத்தூரில் திருத்தளியான் காண் அவன் என்சிந்தை யானே' எனவும், 'வானவர்கள் வணங்கி ஏத்தும் வலிவலத்தான் காண் அவன் என் மனத்துளானே' எனவும் அப்பர் கூறும் தாண்டகத் தொடர்கள் நம் நெஞ்சில் நின்று இனிக்கும் திறமுடையனவாய் அமைந்துள் ளமையைக் காணலாம்.

தயாமூல தர்மம்:

திருநள்ளாற்றுத் திருத்தாண்டகத்தில் வரும் 'தயாமூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம் நலம் கொடுக்கும் நம்பி' என வரும் தொடரால், அறங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாய் விளங்குவது இறைவன் உயிர்களிடத்துக் காட்டும் தயையே யாகும் என்பதைத் தெளிய உணர்த்துகிறார். தயையே அருள் என்றும், கருணை என்றும், இரக்கம் என்றும் குறிக்கப் பெறும். அத்தயையே மனிதரில்

தலையாய மனிதர்களிடத்துக் காணப் பெறும். இதுவும் இறைவன் வழி வந்ததே.

சொல்லுகேன் கேள்:

தம் நெஞ்சை விளித்து அப்பர் அருளும் உபதேசம் நம்மனோர்க்கு நல்ல அறவுரையாகும்.

நம்மைப் பற்றி நின்ற பாவங்கள் நீங்க வேண்டுமானால், நாம் மேலான வீடு பேற்றுக்கு உரியவர்களாக விரும்பினால், நம்மைச் சூழ்ந்துள்ள தீவினைகள் நீங்க வேண்டுமென நினைத்தால், இந்நல்லறத்தைக் கடைப்பிடியுங்கள் எனப் பின்வரும் அறவுரையைக் கூறுகிறார்.

'பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சாவண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லாது ஒருதெய்வம் உளகேன என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழிலாரூரா என்றே போற்றாநில்லே'

என்ற தாண்டகம் இறைவனைப் போற்றி வணங்கிப் பயன் பெறும் முறையைத் தெரிவிப்பதாகும்.

இவ்வாறே தம் நெஞ்சை விளித்துக் கவலைகள் இன்றி நிலைத்து நிற்பதற்கும் நிலைபேறான வீட்டின்பத்தை அடைதற்கும் உரிய வழியாக அரியதொரு திருப்பாடலை அருளிச் செய்துள்ளார். அப்பாடல்,

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்,
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்,
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்,
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

திருமுறைகளில் முதலில் உள்ள ஏழு திருமுறைகளையும் அடங்கல் முறை என்றும், தேவாரம் என்றும் குறிப்பிடுதல் மரபு. அதிலும் அப்பர் பாடியதைத் தேவாரம் என்றும், சம்பந்

தர் பாடியதைத் திருக்கடைக்காப்பு என்றும், சுந்தரர் பாடியதைத் திருப்பாட்டு என்றும் குறிப்பிடுவதும் சைவ மரபு. இப்பொழுது மூவர் பாடலையும் சேர்த்துத் தேவாரம் என்றே வழங்கி வருகிறோம்.

இவ்வாறு அரிய பல கருத்துக்களை உள்ளடக்கியதாய் விளங்கும் திருமுறைகளில் ஆறாமதிருமுறை தமிழ் அறிந்தவர் களோடு பிற நாட்டவரும் அறிந்துணரும் வகையில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளிவருகிறது. நமது ஆதீன அனைத் துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சைவ சித்தாந்த கலாநிதி திரு. டி.என். இராமச்சந்திரன் சிறந்த முறையில் இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவிலேயே அமைத்து, அதற்கு விளக்கக் குறிப்பும் கொடுத் துள்ளமை பயன் தரத்தக்கதாய் உள்ளது. ஆங்கிலம் உயரிய நடையில் அமைந்துள்ளதும் பாராட்டத்தக்கது. இவர் மேலும் உள்ள திருமுறைகளையும் ஆங்கில ஆக்கம் செய்து உலகிற்கு வழங்கத் திருவருள் துணைசெய்வதாக.

இந்நூல் தமிழ்நாடு அரசு தஞ்சாவூரில் நடத்தும் 8-ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் விழுமிய நூலாக வெளிவருகிறது. ஆறாந்திருமுறை உலகத் தமிழ் மாநாட்டில் வெளிவருவதற்கு மேலும் ஒரு பொருத்தம் உள்ளது. பழம்பெரும் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் தமிழன் என்ற இனங்குறித்த சொல் காணப் பெறவில்லை. அப்பர் பெருமான் தான், இறைவன் ஆரியனா கவும், தமிழனாகவும் இருக்கின்றான் என்று புலப்படுத்தும் போது தமிழன் என்ற சொல்லை முதன் முதல் பயன்படுத்தி யுள்ளார் என்பதும் சிந்தித்து மகிழ்தற்குரியதாகும்.

அன்பர்கள் இந்நூலை ஓதி உணர்ந்து பயன்பெறுவார் களாக.

அப்பர் பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டு விட்டால்
இப்பொழுதே இன்பநிலை
எய்தும் பராபரமே.

உ
குருபாதம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருள் வரலாறு

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்பொலிவழகும்
துதித்துவாழ்வாம்.

- ஸ்ரீ சிவஞான சுவாமிகள்.

திரு அவதாரம்:

சைவ சமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராக வைத்து எண்ணப்படுபவர் திருநாவுக்கரசர். கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடுநாட்டில் உள்ள திருவாமூரில், சைவவேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில், புகழனார்க்கும், மாதினியார்க்கும் அருந்தவச் செல்வராய்த் திலகவதியார்க்குப் பின் தோன்றியவர். மருள்நீக்கியார் என்பது இவரது பிள்ளைத்திருநாமம். இவரது இளமைப் பிரயாயத்திலேயே பெற்றோர் பிரானடி சேர்ந்தனர். பெற்றோரது பிரிவாலும், பெற்றோர்களால் தமக்கு மணாளராக உறுதிசெய்யப்பட்ட கலிப்பகையார் போரில் உயிர்துறக்க நேர்ந்ததாலும் ஏற்பட்ட வருத்தத்தால் தாமும் உயிர்துறக்க எண்ணினார் திலகவதியார். இஃதறிந்த மருள்நீக்கியார் தமக்கைக்குமுன் தாம உயிர்துறக்கத் துணிந்தார். 'தம்பியார் உளராகவேண்டும் என வைத்த' கருணையினாலே உயிர்தாங்கி மனைத்தவம்புரிந்துவந்தார் திலகவதியார். இந்நிலையில் மருள்நீக்கியார் உயிர்க்கு உறுதி பயக்கத்தக்க சமயம் எதுவென ஆராய்ந்து சமண்சமயம் சார்ந்தார். அச்சமயத்தில் 'தருமசேனர்' என்ற பட்டம் பெற்றச் சிறப் பெய்தினார்.

சூலை தீர்த்தாட்கொள்ளல்:

தம்பியாருக்காக உயிர்தாங்கித் தவம் புரியும் திலகவதியார் திருவதிகைப் பெருமானிடம் 'தம்பி சைவம் சாரவேண்டும்' என்று விண்ணப்பித்துவந்தார். அதிகைப் பெருமானும் 'அன்னவனைச் சூலைகொடுத்து ஆட்கொள்வோம்' என்று அருள்செய்தார். சில நாளில் தருமசேனரான மருள்நீக்கியார் சூலைநோயால் துன்புற்றார். அமண் சமய அருகரால் சூலை தீராதுபோகவே தம் தமக்கையாரிடம் சார்ந்து பணிந்தார். திலகவதியார் 'திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக்கொடுத்து' அதிகைப்பெருமான் சந்நிதிக்கு அழைத்துச்சென்றார். ஆண்டவனருளால் பாடும் உணர்வு பெற்ற மருள்நீக்கியார் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற திருப்பதிகம். பாடிப் பரவினார். இறையருளால் சூலைநீங்கியதோடு திருநாவுக்காசர் என்ற திருப்பெயரும் பெற்றார். "சூலை தீர்த்து அடியேனை ஆட்கொண்டாரே" எனபது அப்பரடிகள அகச்சான்று.

நீற்றறை நின்மலன் அருளால் குளிர்ந்தது:

இச்செய்தியுணர்ந்த அமணர்களும், அமணர்வயப்பட்ட மகேந்திரவர்மப் பல்லவமன்னனும் இவருக்குப் பலவகையிலும் இன்னல் விளைவிக்கத் திட்டமிட்டுத் திருநாவுக்கரசரை அழைத்துவரச் செய்தனர். நாவரசர் "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற தாண்டகம் பாடி அவரெதிர் சென்றார். அமணர்கள் இவரை நீற்றறையில் (சுண்ணாம்புக்காளவாய்) இட்டனர். அங்கு "மாசில்வீணை" என்ற திருப்பதிகம் பாடி நீற்றறையைக் குளிரச்செய்தார்

நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு:

சமணவர்கள் நீற்றறையில் வேகாது பிழைத்த திருநாவுக்கரசர் தங்கள் அமண் சமயத்தில் கற்றிருந்த மந்திரவலிமையால் தான் நீற்றறையில் வேகாது பிழைத்தார் என்ற துர்ப்போதனையை அரசனுக்குக் கூறினர். நஞ்சுகலந்த பால் சோற்றை நாவரசர்க்கு அருத்தினர். "நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு" என்று நஞ்சுணவை ஏற்று உண்டு ஊனமொன்றும் இன்றி உயிர்வாழ்ந்தார் நாவரசர்.

"வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார் நனிபள்ளியடிகளாரே"

என்பது அப்பர் சுவாமிகள் அகச்சான்று.

இடர்செய ஏவிய யானை பணிதல்:

நஞ்சு உண்டும் உயிர்பிழைத்த நாவுக்கரசரைக் கொலைத் தொழில்வல்ல யானையைவிட்டு இடறச்செய்தனர். மதயானை

வருதலைக்கண்ட நாவரசர் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை" என்ற உள்ள உறுதியோடு "சுண்ண வெண் சந்தனச்சாந்தும்" என்ற திருப்பதிகம் அருளினார். கொலைத்தொழில்வல்ல யானையும் நாவரசரை வலம் வந்து வணங்கித் தன்னையேவிய அமணர்களையே துன்புறுத்தியது.

> "தலைவனாகிய ஈசன் தமர்களைக
> கொலைசெய் யானைதான் கொன்றிடுகிற்குமே"

என்பது அப்பர் சுவாமிகள் அகச்சான்று.

கல்லே மிதப்பாய்க் கடலைக் கடந்தது:

சமணர்கள் தாங்கள் செய்த சூழ்ச்சிகள் பலவற்றாலும் துன்புறாத திருநாவுக்கரசரைக் கடைசியாகக் கல்லில் கட்டிக் கடலில் இட்டனர். அரன் ஐந்தெழுத்தை ஓதி அக்கல்லே தோணியாகக் கடலில் மிதந்துவர, திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரையேறினார். கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் என்ற பெயரோடு இன்றும் திகழ்கிறது.

> "கல்லினோடு எனைப்பூட்டி அமண் கையர்
> ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
> நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
> நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே."

> "கல்துணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
> நல்துணை யாவது நமச்சிவாயவே."

என்பன அப்பாடிகளின் அகச்சான்று.

சூலக் குறியும் இடபக் குறியும்,
ஆலமுண்டானது அருளால் பெற்றது:

கடலினின்றும் கரையேறிய திருநாவுக்கரசர் தமக்கு உற்ற துன்பங்களைத் துடைக்க இறைவன் தந்தையும், தாயும், தமக்கையுமாய் உதவி செய்த நன்றியை உணர்ந்து போற்றுவாராய்த் திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோயிலைச் சார்ந்து, "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன்தோன்றினராய்" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினார். அமணர் சூழ்ச்சியும் நாவரசர் மாட்சியும் உணர்ந்த பல்லவ மன்னன் தானும் சமண சமயத்தைவிட்டுச் சைவம் சார்ந்தான். அமண்பாழிகளையும் பள்ளிகளையும் இடித்து அக்கற்களைக்கொண்டு திருவதிகையில் 'குணபரவீச்சரம்' என்ற சிவன் கோயிலை எடுப்பித்தான். பின்னர் நாவரசர் சிவதலயாத்திரை மேற்கொண்டு திருப்பெண்ணாகடம் என வழங்கும் திருத்தூங்கானை மாடம் சென்று தொழுதார். அங்குள்ள இறைவனிடத்துக்

தாம் சமண் சமயம் சார்ந்ததால் ஏற்பட்ட மாசுநீங்க, சூலக்குறியும் இடபக்குறியும் பொறித்தருள வேண்டினார். அவ்வாறே இறையரு ளால் சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப் பெற்றார்.

''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்ஆவி காப்பதற்கு இச்சையுண்டேல்
இருங்கூற்று அகல
மின்னாரு மூவிலைச் சூலம்
என்மேற் பொறிமேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே''

என்பது அப்பர் அடிகளின் அகச்சான்று.

தில்லைக்கூத்தன் திருவடி தொழுதது:

சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்ற திருநாவுக் கரசர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு தில்லையை அடைந்து கூத்தப்பெருமான் குஞ்சிதபாதம் தொழுதார். ''என்று வந்தாய் எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்''பைப் புலப்படுத் திப் பதிகங்கள் பல பாடினார். அவ்வூரைவிட்டுப் புறப்படுங்கால் அத்தலத்தை உடலால் புரண்டு புரண்டு (அங்கப்பிரதக்ஷிணம்) வலம் வந்தார்.

அரசும் கன்றும் அரனடி தொழுதது:

திருநாவுக்கரசர் தில்லையில் இருந்தபொழுது சீகாழியில் உமாதேவியாரால் ஞானப்பால் உண்டு திருஞானசம்பந்தராய்த் திகழ்ந்த ஆளுடையபிள்ளையாரின் அருள்திறம் கேட்டு அவரை வணங்க விரும்பினார். சீகாழி எல்லையை அடைந்தார்; நாவரசர் வருவதறிந்த திருஞானசம்பந்தர் இவரைச் சீகாழி எல்லையில் பரி வாரங்களோடு எதிர்வந்து வரவேற்றார். சிவவேடப் பொலிவழ கோடு திகழ்ந்த நாவரசரை அப்பரே! என்று அழைத்தருளினார். இதுமுதல் அப்பர் என்றபெயர் வழங்கலாயிற்று. நாவரசரும் கலை ஞானக்கன்றாகிய ஞானசம்பந்தர் முன் 'அடியேன்' என்று மறு மொழி கூறினார். ஞானக்கன்றாம் சம்பந்தரும், நாவுக்கரசராம் அப்பரும் தோணியப்பரைப் பதிகம் பாடிப்பரவினர்.

நல்லூர்ப்பெருமான் நற்றாள் சூட்டல்.

காழிநாதன் கழலடி வணங்கிய அப்பரடிகள் பல தலங்களை யும் வணங்கிக் கொண்டு திருச்சத்திமுற்றம் சென்று அங்குள்ள இறைவனிடம் தமக்குத் திருவடி தீக்ஷை அருளுமாறு வேண்டினார்!

பெருமானும் நல்லூருக்கு வருக என்றருளி, திருவடி சூட்டியருளி னார்.

> "கோவாய் முடுகியடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
> பூவாரடிச் சுவடு என்மேல் பொறித்துவை"
> "இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
> நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
> நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே"

என்பன அப்பரடிகள் அகச்சான்று.

அரசரும் அப்பூதியடிகளும்:

திருவடிதீக்ஷைபெற்ற நாவரசர் பலதலங்களையும் வணங்கிக் கொண்டு திங்களூர் வந்தடைந்தார். அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகளார் தமது புதல்வருடன் சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலிய எல்லா அறங்களையும் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்திருந்ததைக் கண்டும் கேட்டும் காரணம் அறிவதற்காக அப்பூதியடிகளைக் காணச் சென்றார். அப்பூதியடிகளின் செந்தண்மையைக்கண்ட நாவரசர் அவரதுவிருப்பத்திற் கிணங்கி திருஅமுது கொள்ள இசைந்தார். திருஅமுது படைப்பதற்கு இலைகொணரச்சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டியதால் வாழையிலையைத் தாயிடம் சேர்ப்பித்து உயிர்நீத்தான். இறந்த பிள்ளையை மறைத்துவைத்து அப்பருக்கு அமுதுசெய்விக்க முயன்றனர். அமுதுகொள்ள எழுந்தருளிய அப்பரடிகள், மூத்த திருநாவுக்கரசு அரவந் தீண்டி இறந்ததை யறிந்து அவ்வுடலைத் திருக்கோயிலின் முன் கொண்டுவரச்செய்து "ஒன்று கொலா மவர்" எனுந் திருப்பதிகம்பாடி உயிர்பெற்றெழச் செய்தார்.

அப்பர், சம்பந்தருக்கு ஆதிரைச் சிறப்பைச் செப்பி மகிழ்ந்தார் திருப்புகலூரில்:

விடம் தீர்த்த திருப்பதிகம் அருளிச்செய்த திருநாவுக்கரசர் திருவாரூர்த் தியாகேசப்பெருமான் திருவடி தொழுது "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் தமக்கும் உண்டாகுமோ" என்ற கருத்தமைந்த பதிகம் முதலாகப் பல திருப்பதிகங்கள் பாடிப் பரவினார். திருவாதிரைத் திருநாளில் தியாகேசப்பெருமான் திருவுலாக் காட்சியைக் கண்டு தொழுத அப்பரடிகள் அங்கிருந்துப் திருப்புகலூர் சென்றார். அப்பொழுது திருஞானசம்பந்தர் சீகாழியினின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கித் திருப்புகலூரை அடைந்து முருகநாயனார் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். அவர் திருநாவுக்கரசரின் வரவையறிந்து, அடியார்கள் புடை

சூழ எதிர்கொண்டு வரவேற்றார். ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பால் ஆரூரில் நிகழ்ந்த ஆதிரைச் சிறப்பைக் கேட்டுத் தாமும் திரு வாரூர் சென்று தொழுது திரும்பினார். திரும்புங்கால் திருநாவுக் கரசர் அடியார்கள் புடைசூழ ஞானசம்பந்தரை வரவேற்று மகிழ்ந் தார். இஃது இரண்டாவது சந்திப்பு.

படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தது:

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் அடியார்கள் புடைசூழ, திருக்கடவூர் முதலிய பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திரு வீழிமிழலை சென்றனர். அப்பொழுது மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சத்தால் அடியவர்கள் துன்புறாவண்ணம் கோயிலின் கிழக்குப் பீடத்தில் திருஞானசம்பந்தருக்கும், மேற்குப் பீடத்தில் திருநாவுக்கரசருக்கும் மிழலைப்பெருமான் நாள்தோறும் படிக்காசு வைத்துவந்தார். அக்காசுகொண்டு அடியவர்கட்கு இரு மடங்களிலும் பறை சாற்றிச் சோறிட்டனர். உழவாரத் தொண்டு செய்த பான்மையினால் வாசியில்லாக் காசுபெற்றார் வாகீசர். ஞானப்பால் உண்டமையால் திருக்குமாரராம் பான்மை வாய்ந்த ஞானசம்பந்தர் வாசியுள்ளகாசு பெற்றார். (வாசி - வட்டம் கொடுத்து மாற்றும் காசு) "இருந்துநீர் தமிழோடிசை கேட்கும் இச் சையால் காசு நித்தம்நல்கினீர்" என்ற சுந்தரர் வாக்காலும்,

"பாடலங்காரப் பரிசில் காசருளிப்
பழுத்த செந்தமிழ் மலர்சூடி
நீடலங்காரத்து எம்பெருமக்கள்
நெஞ்சினுள் நிறைந்து நின்றானை"

என்ற திருவிசைப்பாவாலும் இந்நிகழ்ச்சியை நன்கு தெளியலாம்.

திருமறைக்காட்டில் கதவு திறந்தது:

பஞ்சம் நீக்கிய இருபெருமக்களும் வேதாரணியம் எனவழங் கும் திருமறைக் காட்டிற்குச் சென்று திருக்கோயிலை வலம் வந்து வாயிலை அடைந்தனர். கதவு அடைக்கப்பட்டிருப்பதை வின வினர். 'முற்காலத்தில் வேதங்கள் வழிபட்டுத் திருக்காப்பிட்டுச் சென்றன என்பதையும், அதுமுதல் 'பக்கத்திலே வாயில் அமைத்து அன்பர்கள் வழிபட்டு வருகின்றனர்' என்பதையும் அங்குள்ளோ ரால் அறிந்து நேரே கும்பிடவேண்டும் என்ற விருப்புடையோர் ஆயினர். திருஞானசம்பந்தர் நாவுக்கரசரைப் பார்த்துத் 'திருக்க தவம் திறக்குமாறு பாடியருளுக என்றார். அதற்கிணங்க அப்பர் சுவாமிகள் "பண்ணின் நேர்மொழியாள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறவாமையால் பதினொன்றாவது பாடலில் "இரக்கம் ஒன்றிலீர்" என்றுபாடி

வணங்கிய அளவில் மறைக்கதவம் திறக்கப்பெற்றது. இருவரும் நிலமுறப் பணிந்தனர். திருநாவுக்கரசரது விருப்பத்திற்கு இணங் கத் திருஞானசம்பந்தர் அடைக்கப் பாடினார். அன்று முதல் அக் கதவு திறக்கவும் அடைக்கவுமாக இருந்து வருகிறது.

திருவாய்மூரில் சிவனுருக்கண்டது:

திருநாவுக்கரசர்; தாம் அரிதின் முயன்று திறக்கப் பாடியதை யும், ஞானசம்பந்தர் ஒரு பாடலில் அடைக்கப் பாடியருளிய எளி மையினையும் எண்ணிப் 'பெருமான் திருவுள்ளக்கிடக்கையை உணராது அயர்த்தேன்' என்ற கவலை உடையவராய் அறிதுயில் கொண்டார். அப்பொழுது வெண்ணீறணிந்த கோலத்தோடு இறைவன் எழுந்தருளி 'நாம் திருவாய்மூரில் இருப்போம் அங்கு எம்மைத் தொடர்ந்துவா' என்றருளிமறைந்தனர். துயிலுணர்ந்த நாவரசர்,

''எங்கே யென்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென்கொலோ''

என்ற பாடலை முதலாகக்கொண்ட பதிகம் பாடிக் கனவில் தோன் றிய வடிவத்தோடு இறைவன் வழிகாட்ட உடன் சென்ற நாவர சருக்கு ஒரு பொற்கோயிலைக் காட்டிமறைந்தருளினான் இறை வன். ஞானசம்பந்தர், நாவரசர் திருவாய்மூர் செல்கின்றார் என் பதையறிந்து அவரும் அங்குச் சென்றார்.

''திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப் பாடி யடைப்பித்தார் உந்நின்றார்'' என்று நாவரசர் பாடிய அளவில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் காட்சி கொடுத்தருளினார். கண்டு தரிசித்த ஞானசம்பந்தர் நாவுக்கரசருக்கும் காட்டினார். திருநா வுக்கரசர் கண்டு மகிழ்ந்து, பாட அடியார் பரவக்கண்டேன்'' என்ற திருத்தாண்டகம் பாடிப்பரவினார். இருவரும் திருமறைக் காடு சேர்ந்தனர்.

பழையாறை வடதளிப் பரமனைக் காணுதல்:

மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் இருவரது வேண்டு கோட்கிணங்கித் திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டிற்கு எழுந் தருளினார். திருநாவுக்கரசர் திருமறைக் காட்டினின்றும் பல தலங் களையும் தரிசித்துக் கொண்டு பழையாறையையடைந்து வடதளி யென்னும் கோயிலை நோக்கித் தொழுதார். அக்கோயிலிலுள்ள சிவலிங்கமூர்த்தியை மறைத்துச் சமணர்கள் அருகதேவனை வைத்

துத் தொழுது வந்தனர். இஃது அறிந்த அப்பமூர்த்திகள் 'சிவலிங்க மூர்த்தியை வழிபட்டே உணவுகொள்வேன்' என்று விரதமிருந் தார். அடியவர் கருத்தறிந்து முடிக்கும் ஆண்டவன் சோழமன்னன் கனவில் தோன்றித் தான் இருக்கும் இடத்தை அடையாளங்களுடன் சுட்டி ஆலயம் அமைக்க ஆணையிட்டருளினார். அவ்வண்ணமே சோழ மன்னன் அமணர் மறைத்து வைத்த சிவனுருவைக்கண்டு ஆலயம் அமைத்து வழிபட்டான். அப்பரடிகளும் சென்று வழி பட்டுத்,

> ''தலையெலாம் பறிக்குஞ் சமண் கையருள்
> நிலையினால் மறைத்தால் மறைக்கொண் ணுமோ''

என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிலநாள் தங்கிப் பணி புரிந்தார்.

திருப்பைஞ்ஞீலியருகில் பொதிசோறு பெறுதல்!

திருப்பழையாறை வடதளியினின்று'ம் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளினார். அப் பொழுது பசியும் நீர்வேட்கையும் வருத்தின. உடல் தளர்ந்தாலும் உளம் தளரா வாகீசர் வரும்வழியில் பைஞ்ஞீலி இறைவர் சோலை யும், குளமும் தோற்றுவித்துத் தாம் ஒரு அந்தணர் கோலத்தில் பொதிசோறு சுமந்து சென்று நாவரசருக்கு அளித்து அருந்தச்செய் தார். உணவு உண்டு களைப்பு நீங்கிய நாவரசரை அந்தணர் வடிவு கொண்ட இறைவன் பைஞ்ஞீலிக்கு அழைத்துச் சென்று மறைந்தரு ளினார். அவ்வதிசயம் கண்ட அப்பரடிகள் பதிகம் பாடித் துதித் தார்.

திருவையாற்றில் கயிலைக் காட்சி:

பைஞ்ஞீலிப் பரமனைப் பரவிய நாவரசர் நடுநாட்டுத் தலங் களையும், தொண்டை நாட்டுத் தலங்களையும் தரிசித்துத் திருக் கயிலை யாத்திரையை மேற்கண்டார். இமய மலைப் பகுதியில் கரடுமுரடான பாதைகளில் நடந்தும் ஊர்ந்தும் நகர்ந்தும் உடலு றுப்புக்களெல்லாம் தேய்ந்து சோர்ந்தார். இந்நிலையில் கயிலைப் பெருமான் முனிவர் வேடம் தாங்கி நாவரசர் முன்தோன்றி ''மனி தரால் அடையத்தக்கதன்று திருக்கயிலை''என்று அறிவித்தார். அது கேட்ட அரசர் ''ஆளும்நாயகன் கயிலையில் இருக்கை கண்டல் லால் மாளும் இவ்வுடல் கொண்டுமீளேன்'' என்று உறுதி உரைத் தார். அவரது மனத்திண்மை கண்ட பெருமான் மறைந்து 'ஓங்கும் நாவினுக்கரசனே! எழுந்திரு என்று அசரீரி அருளினார். அது கேட்டு ஊறுநீங்கிய உடலுடன் எழுந்த நாவரசர் கயிலைக் காட்சி வேண்டிப் பணிந்தார். இறைவன் ''அருகில் உள்ள இத்தடாகத்தில்

மூழ்கித் திருவையாற்றை யடைந்து அங்கு நம் திருககயிலைக் காட்சி யைக்காண்பாயாக'' என்று அருளினார். அவ்வாறே அருகில் உள்ள தடாகத்தில் மூழ்கி ஐயாற்றில் உள்ள திருக்குளத்தில் எழுந்து திருக்கயிலையிலுள்ள காட்சியைக் கண்டு ''மாதர்ப் பிறைக்கண்ணியானை'' என்ற திருப்பதிகம் பாடிப் பரவினார்.

திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்தல்:

கயிலைக்காட்சி கண்ட திருநாவுக்கரசர் திருமழபாடி முதலிய தலங்களைவணங்கி திருப்பூந்துருத்தியையடைந்து இறைவனைத் தொழுதார். அங்குப் பலநாள் தங்கிப் பணி புரிய விரும்பியதால் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்தார். உழ வாரப்பணி புரிந்ததோடு திருவங்க மாலை முதலிய பலதொகைத் திருப்பதிகங்களையும் அருளிச் செய்தார். இந்நிலையில் பாண்டி நாடு சென்று சிவநெறி பரப்பிய திருஞானசம்பந்தர் சோழநாட் டிற்கு வந்து திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருப் பதைக் கேள்வியுற்றுத் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினார். அதை அறிந்த திருநாவுக்காசர் ஞானசம்பந்தரை எதிரே கண்டு கும்பிட வேண்டு மென்ற விருப்பினராய் அடியவர் எவரும் அறியா வண்ணம். ஞானசம்பந்தர் எழுந்தருளிய பல்லக்கைச் சுமந்துவந் தார். திருப்பூந்துருத்திக்கு அருகில் வந்த ஞானசம்பந்தர், 'அப்பர் எங்குற்றார்' என வினவ 'உம்முடைய அடியேன் உமது திருவடி களைத் தாங்கும் பெருவாழ்வு வந்து எய்தப்பெற்று இங்குற்றேன்' என்றார் அப்பர். அதுகேட்டபிள்ளையார் சிவிகையினின்றும் இறங்க ஒருவரை ஒருவர் வணங்கி மகிழ்ந்து சிலநாள் அத்தலத்து எழுந்தருளியிருந்தனர். இது மூன்றாவது சந்திப்பு.

அரம்பையர் வலையில் அகப்படாதிருத்தல்:

திருநாவுக்கரசர் பாண்டிநாட்டுத்தலங்களைத் தரிசித்து, சோழ நாடு மீண்டு திருப்புகலூரை யடைந்து உழவாரப் பணி செய்து கொண்டு அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் முதலிய பல பதிகங்கள் பாடினார். புக லூரிறைவன் திருக்கோயில் பிரகாரத்தில் உழவாரப்பணி செய்யும் பொழுது, இறையருளால் பொன்னும் நவமணிகளும் தோன்றின. அவற்றையெல்லாம் கல்லோடும் புல்லோடும் தூக்கி எறிந்தார். இவரது நடையறாப் பெருந்துறவை நாட்டிற்கு எடுத்துக் காட்டத் தேவ அரம்பையர்களை இவர் முன்னர்த் தோற்றுவித்தார் இறை வன். அவர்களது ஆடல்பாடல்களாலும் இவரது உள்ளம் மாறுபட வில்லை. மாறுபடா மாண்பைப் ''பொய்ம்மாயப் பெருங்கடலில்'' என்று தொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்தால் பலப்படுத்தியுள் ளார்.

திருப்புகலூரில் சிவன்தாள் சேர்தல்:

பக்தியின் வடிவுகொண்ட திருநாவுக்கரசர், பரம்பொருளை அடையுங்காலம் அணித்தாகவிருப்பதையறிந்து "ஆண்டவனது புகலாகிய - அடைக்கலப் பொருளாாகிய தன்னைப் புகலூர்ப்பெருமான் சேவடிக்கீழ் இருத்துவார்" என்ற கருத்துடன் பல திருப்பதிகங்கள் பாடி முடிவாக "எண்ணுகேன் என் சொலலி எண்ணுகேனோ" என்று தொடங்கும் திருத்தாண்டகத்தை அருளிச்செய்து "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று புகன்று சித்திரைச் சதய நன்னாளில் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார். இவர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் 312. இவை 4,5,6 திருமுறைகளாக விளங்குகின்றன.

ST. TIRUNAAVUKKARASAR alias ST. APPAR

The Tiruppukazh-hymn on Tiruvamoor refers to that place as "Maathu pukazhai valarkkum Tiruvaamoor" The word "Maathu" and the word "Pukazh" are fraught with an overtonal significance. 'Maathu' may symbolise Maathu-iniyaar and 'pukazh' may symbolise Pukazhanaar, the parents of St. Appar. It was in Tiruvaamoor our Saint made his avatar. He was by birth a vellaala and his clan was known as *Kurukkaiyar kudi*.

Our Saint was christened 'Marulneekki' (the remover of tohu-bohu). When he joined the Samana fold, he received the name Dharmasena (Dharma's chief). Later, when he made stupendous strides in his new-found faith, he was hailed as "Thangkalil Melaaya Darumasenar" (Dharmasena par excellence). When he returned to his parent-faith, Siva named him "Naavukku Arasu" (Lord of Language) When he called on the godly child Tirugnaanasambandhar, the latter addressed him as 'Appar' (Father) These various names are not adventitous accretions but solid acquisitions which truly historicize the peerless odyssey of our Saint

St. Nambi Aaroorar hailed our Saint as one who is poised in TIRUNINDRA SEMMAI (Salvific excellence). This Tamil phrase occurs in a hymn of St. Appar's which begins with the words "Sivan enum osai". Tirunindra Semmai is the way of life informed by Godliness. It was in this way our Saint was firmly established when he was restored to Saivism by his saintly sister Tilakavatiyaar. Tilakavatiyaar was truly the tilaka of Saivism. None led a more

austere or more spiritual life than she. She was a *tapaswini* of a very sublime order and her whole life was a *Siva-yagna*. She is not only the elder sister of our Saint, but truly speaking the very mother of renascent Appar.

When, thanks to the grace of Lord Siva, our Saint came back to the faith of his forefathers and made his first visit to the shrine at Tiruvatikai, led by his sister to the presence of Siva and sang the first decad of Tevaaram verses, Lord Siva was so pleased with him that He blessed him thus:

"As you have in tuneful harmony of Tamil's majesty
Sung the ambrosial decad--a rich wreath of word-blossoms--,
Your goodly name will, in all the seven worlds, be
Endearingly known as NAAVUKKARASU"

May Saivites contemplate the greatness of this mantric nomenclature: NAAVUKKARASU. It is the very name of Uma--Siva's own Consort. A verse of Tirumoolar's Tirumantiram begins thus: "Vazhutthidu Naavukkarasu Ivall". If Lord Siva chose to confer on our Saint the very name of His Sakti, then the infinitely immense glory of our Saint can, at least, to an extent, be understood by the likes of us. Such is the endless glory of Vaagisa (Lord of Language). Truly speaking it is our Saint who inaugurated the revival of Saivism. In His infinite mercy, Pasupati gave us a Vaakpati to hymn all the Vedic stotras in dulcet Tamil numbers.

Naavukkarasu-- the Sovereign of Language, has gifted to us all, a language that is bound to carry everyone of us to the sacred feet of the Lord of lords-- Siva Mahaadeva. Our Saint's verses are bound to bless us. Repentance, contrition, humility, compassion, loving kindness, egolessness: it is of these, his hymnody is wrought. These verses divine mirror his chequered career punctuated at each and every turn by trials and tribulations, angst and agony as well as sorrows and miseries. The first fifty years of his life had carried with it the burden of a millennium.

Our Saint never forgave himself for his apostasy He was a Jain for nearly thirtyfive years and he spent the best part of his life denigrating and ditching Saivism With his massive scholarship. polemical prowess and encyclopedic knowledge he bulldozed all opposition away. Even the tralatatious adherents of Jainism stood awed in the presence of this new comer to their fold From the Saivite point of view, he was doomed to dwell in the worst of hells. However Lord Siva, in His ever-during mercy, retrieved him from the bottomless pit and made him the King of Utterance to be hailed by all the seven worlds. This, for our Saint, was grace that surpassed understanding. He felt in his flesh and marrow that he did not merit this. He confessed this in his hymn beginning with the words: "Atthaa unadiyenai anbaal aartthaai".

Father by sheer love You drew me--Your slave--, to You
    And bathed me in the flood of Your benign look;
You the infinitely rare, became easy of access to me;
    Pitying me, You claimed and blessed and accepted me.
Did You not forgive all my trespasses-- those
    Of a mad man, a fool, a ghoul and a dog?
Is all this for my sake? Alas, alas!
    Behold the blessed grace of Him--my Lord!

The dictum of Suga Brahmam Ramaswami Sastrikal which says that the vainglorious for ever flaunt their trifling successes and the pious for ever remember their sins, is significant. Many of the heart-rending outbursts of our Saint are surcharged with an intense pathos. "How have I wasted my time!" (Kaalatthai Kazhitthavaare), "What can I, the deceptious one, do!" (Vanjanen en seikane), "Why, why was I born at all!" (en seivaan tondrinane), "Can I survive, if I forget!" (Maranthu uyvano), "Woe unto me! How in the past have I-- the poor one --, dispraised the Lord! (Emmaan thannai yezhaiyen naan pandu ikazhnthavaare), "How many, O how many were the days that I wasted, not praising the Lord of Pullirukkuvelur" (Pullirukkuveluraanai-p-potraathe aatranaal pokkinene): These are but a few instances. Our Saint was ever after intensifying his

servitorship. He prayed to the Lord of Tillai thus: "Pray, do not befuddle me" (Chintaiyei tikaippiyathe). This is a significant prayer. The Lord clarifies the mind of the pious and hardens the heart of the evil-doer. The Bible says: "And the Lord hardened the heart of the Pharaoh.." (Exodus 9-12).

The hymns of our Saint bear eloquent testimony to the episodes relating to his life, as recorded by the Periya Puranam. The Lord afflicted our Saint with an acute colic to retrieve him from the fold of Jainism. This is referred to by him in the Tani-th-Tiru-th-Thaandakam, as follows: "He cured me-- the slave--, of colic and ruled me" (Soolai theertthu aatkondaare). It was Tilakavatiyaar, the elder sister of our Saint, who was responsible for the retrieval of our Saint from the fold of Jainism. He therefore hails her as his mother, father and sister in his Tiruppaathirıppuliyur decad thus: "Eendraalumaai yenakku enthaiyumaai utan tondrinaarai--" (He wasted his time for about four decades in an alien faith)-No doubt, his life as a Jain was at once rigid and austere. He also practised non-attachment. However all these were but an exercise in futility. He led the life of the base, and according to our Saint, the base do not give up their baseness unless they suffer and their suffering becomes unendurable. These are referred to in his decad on Tirukkadavur Virattam. Thus does our Saint confess:

"I lived a life of non-attachment, irrigating the barren land,
My life illustrated the truth of the dictum that says
The base improve not unless severely punished."

(Patrilaa vaazhkkai vaazhnthu paazhukke neer iraitthane Utralaar kayavar theraar ennum katturaiyodu otthane).

Many were the ordeals to which he was put, by the Pallava King. He was thrown into a lime-kiln. He was administered poison. This is referred to in his decad on Tirunanipalli. Our Saint sang thus.

"The Lord of Nanipalli transformed into ambrosia
The evil and envenomed dish of rice and milk
Which the unjust Jains gave me to eat."

(Vanjanai-p-paal soraakki vazhakkila Amanar thantha Nanju amuthaakkuvitthaar Nanipalli adikalaare).

An elephant was set on our Saint. This evil boomeranged. The tusker spared our Saint but did away with the Jains. Finally he was tethered to a stone-slab and thrown in the mid-sea. By the grace of Lord Siva the stone began to float and our Saint safely reached ashore. His hymn on Tiruneelakkudi celebrates this victory.

"When the Jains tied me to a slab of stone
And threw me into the abundant flood,
I came out alive by chanting the hallowed name
Of Lord Hara of Neelakkudi-- girt with long paddy-fields"

(Kallinodu enaippootti Amankaiyar
Ollai neer puka nookka en vaakkinaal
Nellu neell vayal Neelakkudi Aran
Nalla naamam navitri uynthane andre.)

When such miracles successively occurred in the life of our Saint, the Pallava King eventually shook himself away from the clutches of the Jains. He rued his conduct, adored our Saint, embraced Saivism, destroyed the pagodas of the Jains and built a temple for Lord Siva.* This King was Mahendravarma who flourished between 580 and 630 A.D.

Repeated reading of the life of our Saint has driven us to the following conclusion. At some point of time, the ever-penitent Saint should have thought thus: "Should I do away with this body-- the one that was fostered by the food of the Jains for decades--, all at once, or am I to do it gradually (though utterly)? If I should continue to endure this wretched vesture, then it should be with the leave of the Lord." So when our Saint came to the shrine at Pennaakadam, he prayed to Lord Siva thus

"I have a submission to place at Thy golden feet;
Be pleased to consider it· if Thou art pleased
To save my life and rid me of the loud saying
(That points to my nexus with the Jains).

O Lord Sudar-k-Kozhundu of Thoongkaanai Maatam
Of Kadanthai-- girt with vaulting clouds,
Be pleased to inscribe on my person
The fulgurant, three-leaved trident."

(Ponnaar tiruvadikku ondru undu vinnappam potri seyyum
En aavi kaappatharkku icchai undale irum kootru akala
Minnaarum moovilaiccholam en male pori mevu kondal
Thunnaar Kadanthaiyul Thoongkaanai Maatacchudar Kozhunde.)

Verses 3 to 9 of this decad are missing. In the envoi verse the Saint prays for an inscribing on his person the bull-emblem too (Idapam pori).

While explaining the word Kootru which may mean death, the foot note at page 375 (Kasi Matam edition of Tirunaavukkarasar Tevaaram, 1957) says that it means "a saying" (which has reference to his past Jain affinity). It is therefore clear that our Saint sought the approval of the Lord for continuance of his life in a body that had, in the past, sinned against Lord Siva. The sought-for insignia were imprinted on our Saint by a Siva-Bhoota. This favour was conferred on our Saint in utter secrecy and none else knew of it.

From Pennaakadam he proceeded to Aratturai, Muthu Kundram and other holy places. Eventually he arrived at Tillai, a darshan of whose Lord confers fulfilment of one's birth on earth. From Tillai our Saint proceeded to Tiruvetkalam, thence to Tirukkazhippaalai and then back to Tillai. It was during this time he heard about the boy-saint Tirugnaanasambandhar. He was fired by a penchant to adore the flower-feet of the godly child. He reached Seerkaazhi via Tirunaaraiyur Hearing of the arrival of our Saint, St. Sambandhar left his house to receive him. Then took place the historic meeting. As our Saint fell at the feet of the divine child, the latter took hold of the hands of the aged saint with his flower hands-- indescribably great - , hailed him and addressed him as "Appar" (Father). The lips that called him Appar were the self-same lips which drew unto them the Lord

mounted on the Bull, by a cry (Vidaiyinmale Varuvaar Thammai azhuthu azhaitthukkondavar thaam "Appare" ena..) When thus addressed, our Saint, in utter humility, answered thus. "(I am) your servitor."

For St. Sambandhar, our Saint was FATHER. However our Saint never claimed the privileges of a father. He for ever behaved as a servitor. Only once did St Appar address St. Sambandhar as a child. This was the outcome of uncontrollable anxiety he felt for the safety of the boy saint When the boy-saint decided to proceed alone to Madurai to confront the Jains, our Saint who knew all about their machination and deviltry, burst out thus "O child! There is no limit to the deception of those Jains!"(Pillaai! Antha Amankaiyar Vanjanaikkor avathi illai...)

St. Appar, according to Nambi Aandar Nambi, had composed in all 4,900 decads (yezhu yezhu nooru irum panuval pakarum Maakavivogi). However only 392 decads are today extant. These sing of 125 shrines. The singular greatness of our Saint lies in the fact that he had visited all the shrines about which he had sung. St Sambandhar had sung of Indiraneelaparuppatam, Kedaaram, Kedeeccharam, Gokarnam, Konamalai and Sri Sailam which he did not visit in person. So too Sundarar who had not visited Kedeeccharam, Sri Sailam and Kedaaram, had sung about these shrines.

St. Appar went on foot from shrine to shrine. He had on many occasions travelled alone. After his first meeting with the boy-saint he visited the shrines at Seerkaazhi and Kolakkaa in his company. While at Seerkaazhi our Saint stayed with the godly child in the latter's house for a number of days and dined with him. It is thus referred to by St. Sekkizhaar· "Pillaiyaar tham tiru matatthil ezhundu aruli amuthu seythu..." Matam is a word which also refers to the house of a holy person. (Vide ILR Madras, p.103 and 1952 (1) M.L.J., p 557).

Taking leave of the boy-saint, our Saint visited Tirukkaruppariyalur, Tiruppunkur, Tirunidur, Tirukkurukkai, Thiruninriyur, Thirunanipalli and other places. Thereafter his

pilgrimage was along both the banks of the Cauvery. He worshipped at Tirucchemponpalli, Tiruvethirkolpaadi, Tirukkodikaa, Tiruvaavaduthurai, Tiruvidaimaruthur Tirunaakeswaram, Tiruppazhayaarai and Tirucchatthimutram It was at the last mentioned place, he prayed to Lord Siva that He be pleased to grant him "Tiruvadi-Diksha." The Lord bade him to come unto Tirunalloor where the beatitude sought by him was conferred on him. The decad containing the words: "Nanainthanaiya Tiruvadi en thalaimel vaitthaar" celebrates this event. In spite of the imprinting of the Saivite emblems on his person at Thoongkaanai Maatam, our Saint was not happy with his body which was sustained by the food of the Jains for decades. He ached for the godly touch, prayed for it and obtained it. He sojourned at Tirunalloor for some days. From here he visited places like Aavoor and Paalaitthurai However, he would return to Nalloor to abide there.

Then taking leave of the Lord of Nalloor he visited Tiruppazhanam and thence moved to Tingkaloor where, till then unknown to our Saint, abode St. Appoothi-- a true chela of our Saint. It was here he resuscitated the moribund son of St. Appoothi. Perhaps, it was a resurrection.

Our Saint's love for St. Appoothi was without bounds. In a verse of sublime style he praised St. Appoothi. "Nataimaanacchirappitthu" are the words of St. Sekkizhaar. Our Saint abode at Tiruppazhanam for many days.

From there he could have visited Thiruvaiyaaru which was only three miles away. However he did not visit it. It was the will of the Lord of Thiruvaiyaaru, as is affirmed by Panditha Vidwan T.V. Gopala Ayyar, that our Saint should reach Thiruvaiyaaru, not on foot, but in a mirific way. From Pazhanam our Saint returned to Nalloor. After some days he left for Tiruvaaroor via Pazhaiyaarai, Valanjuzhi, Kumbhakonam, Naaloor, Tiruccherai, Kudavaayil, Tirunaraiyoor, Tiruvaanjiyam, Peruvelur and Tiruvilamar. Of the many decads he sang on Poongkoyil at Tiruvaaroor, as many as 21 decads are extant.

Twentyfive are the Siva moortas (iconographical representations). Lord Thiagaraaja is not to be numbered among these. "Aiainjin appuratthaan" are the words of our Saint.

Ten adages are referred to in a decad on Tiruvaaroor. These are aphorisms, not apophthegms, and are apodeictic. The first of these condemns the immature preference of man. Mellow wisdom is to be preferred, not raw knowledge Our Saint condemns himself for having preferred the green one to a ripe fruit. "Kani irukkak Kaai Kavarntha" are the words of our Saint. "Kani iruppak Kai Kavarntha" are the words of Tiruvalluvar.

The man who is after meat will not chase a corbie when he can easily hunt a hare. It is folly to forsake a hare for a crow. This adage which is referred to by our Saint is also quoted by St Tirumangkai Aazhwar in his "Siriya Tirumadal".

Like the Bible our Saint affirms that the Lord is the way. "Sel saarvum aanaan" are his words.

Tiruvaroor was a city where flourished the practitioners of manifold Saivism. This is referred to by our Saint in a verse beginning with the words: "Arumanitthadam".

Our Saint was for ever meditating on the Lord with a view to envision him. "Kaandale karutthaai ninainthirunthane" are the words of our Saint. This kaandal has nothing to do with logic. It is not "Pratyaksha" as is opined by a writer on our Saint.

The decad of our Saint on the Aadirai Festival at Aaroor in Kurinji-p pann, is extraordinarily mellifluent. According to our Saint, Maha-vritins-- the wearers of garlands wrought of white skulls-- (Venntalai maalai Virathikal) participated in this festival. Actually, this decad on the Aadirai-Festival of Aaroor, according to St. Sekkizhaar, was sung by our Saint at Tiruppukaloor, at the request of the boy-saint, the very son of Lord Siva (Sevil tikazhnathavar maintharaana Tirugnaanasambandhar).

Whenever our Saint thought on his days of apostasy he was besieged by immense remorse. One of the verses on Aaroor runs thus:

With the body in which life abides, for the post,
The heart, for the water-bowl
And misery, for the horizontal beam,
Holding the pole of sorrow
I plied the shadoof; the crops were not fed;
In vain did I bale out water and stand
Fatigued by the Five (senses), O Lord
Of Aaroor Moolattam!

The hymn beginning with the words. "Aayiram thingkal" is the Purusha Sukta in a nut-shell.

In a decad dedicated to the glory of servitorship, our Saint carries a tirade against the Jains. Such attacks by our Saint are few and far between.

In one of the verses our Saint pays homage to St. Nami Nandi. "Nami Nandi Neeraal tiruvilakkittamai neell naadu ariyumanre" are the words of our Saint. Nami Nandi Naayanaar is referred to thrice in this decad. It appears to us, that one of the commandments of our Saint makes it mandatory for us to emulate Kungkuliyakkalaya Naayanaar, for our Saint says: "For ever burn the incense of kungkuliyam" (Kungkuliyappukai koottu enrum).

In one of the verses-- not easy of explication--, our Saint gratefully hails the Lord of Aaroor who had gifted to our Saint, at his hour of crisis, his elder sister-- truly a mother.

"Ammaiyaar enakku enru enru aratrinerkku
Ammaiyaarai-th-thanthaar Aaroor Ayyare".

Our Saint was a gift of Tilakavatiyaar to Saivism. He owed to her everything even as we owe everything to him.

Our Saint deemed himself to be a bonded slave of Lord Siva. This is referred to in one of his Thaandaka-hymns on Aaroor. "Aavanatthaal ennai aandu kondaan kaann" are the words of our Saint.

The odyssey of the soul and its ultimate achievement of the "Thaadalai-Beatitude" (the Siddhanta Advaitic union) is thus portrayed by our Saint in the following hymn:

First, she heard of His name;
Then of His form and poise she heard,
Of His Aaroor she heard next;
